உதயதாரகை—MORNING STAR.

PUBLISHED AT MANEPY, CEYLON, TWICE EACH MONTH, AT TWO SHILLINGS A YEAR, PAYABLE IN ADVANCE.

௰௩ம் புத்தகம், சஞ்சிகை ௩.] ௲௮௱௫௩ம் ௵. மாசி ௴. ௰௨. வியாழக்கிழமை.—Thursday, February 10, 1853. [Vol. XIII. No. 3.

TERMS OF THE PAPER.

A single copy 2 shillings a year. Mail subscribers, free of postage, 4 shillings—TO BE PAID IN ADVANCE. If payment is delayed beyond the first quarter, 6 pence extra; if beyond the second, or July 1st, 1 shilling. To Native Agents, who will send ADVANCE PAY for 5 copies, we will send the 6th gratis, and at this rate for any number of copies.

Advertisements inserted for 3 shillings a square; less than a square 2 shillings. At this rate each will appear twice, *if the advertiser so requests.*

All notices of deaths and marriages will be chargeable as advertisements.

Communications must be *post paid* to receive attention.

The following persons will act as Agents for the Star.

JAFFNA—The Missionaries.
POINT PEDRO,—L. Leisching, Esq.
TRINCOMALIE—
COLOMBO—Messrs. P. B. Fernando & Son.
KANDY—Mr. L. Lawton.
BATTICALOE—Rev. J. Kilner.
MADURA—Rev. C. F. Muzzy.

[The History of a Tamil Inebriate.]

ஓர் மதுபானியின் விருத்தாந்தம்.

நான் அறிந்த ஒருகோவிற்பற்றைச் சேர்ந்த ஓர் கிராமத்தில் உத்தம புருஷனுக ஓர் வேளாளன் இருந்தான். அவனுக்கு இரண்டு புத்திரருண்டு. அவனுடைய ஆஸ்தி நாலாயிரம் இறைசால்மட்டுக்குக் காணும். அவனுக்குப் பொன், வெள்ளி, பித்தளை, கன்று காலி, அடிமை என்பவைகள் முன்பின்னுக ஆயிரம் இறைசால் மட்டுக்குக் காணும். இன்னும் அடுத்த குறிச்சியில் ஒரு கிரேஸ்தனிருந்தான். அவனுடைய ஆஸ்தியும் நாலாயிரம் இறைசால் மட்டுக்குக் காணும். அவனுக்கு மூன்று ஆண்பிள்ளைகளும் ஒரு பெண்பிள்ளையுமுண்டு. அந்தப் பெண்பிள்ளைக்கு மூவாயிரம் இறைசால் மட்டுக்குச் சீதனமுங் கொடுத்து, மேற்குறித்த மனுஷனுடைய மூத்த குமாரனுக்கு விவாகம்பண்ணி வைத்தார்கள். அவர் புதுமணப்பிள்ளையாய் அந்தக் குறிச்சியிலிருக்கையில் அவ்விடத்திலே ஒரு கூத்தாட முயன்றார்கள். அதில் இவரும் ஒருவராய் ஏற்பட்டார். இவருடைய குரல் சாரதமற்றிருந்ததினால் நீர் அற்ப சொற்பமாய்க் கள்ளுக் குடித்துவந்தால் குரல் தேற்றமாயிருக்குமென்று கூட்டாளிகள் புத்திசொன்னதினாலே, இவரும் இரகசியத்திலே கொஞ்சங் கொஞ்சங் குடித்துவந்தார். அப்படியே குடித்து வரவரக் குடியிலே தேறினார். குரலோ மாறவில்லை. பின்பு இவர் பரசியமாய்க் குடிக்கவுந் தொடங்கினார். பின்பு இவர் ஒருமுறை திருவிழாவுக்குப் போனவிடத்தில் இவருடைய சங்காத்திகளாகிய விடர் சிலர் இவரையுந் தங்கள் வியாபாரத்தில் உட்படும்படி புத்திசொன்னார்கள். அவரும் அதற்கிசைந்து சுகந்தவஸ்திர பூஷண அலங்கிறுதனுய்ப் போய்ச் சங்கீத சாகித்திய சல்லாப லீலாவினோத சங்கதனுய் விருந்துகொண்டாடியிருக்கையில் மஸ்துள்ள வஸ்துக்களிற் சில உண்டைகளை உட்கொண்டதினால் அன்றிரவு கன நித்திரையானார். பின்பு அவர் எழும்பி வெளியேவந்து தன் சங்க தூதரையுங் கூட்டுவியாபாரிகளையுங் கண்டு வெட்கி நாணி முகங்கோடி நின்றார். அவர்களோ நகைத்து நையாண்டிபண்ணிப் பற்பலவிதமாய்ப் பரிகாச வார்த்தை பேசினதினால் இவர் அதிகந் தூண்டப்பட்டுத் தன் சங்கதூதரை நோக்கி மறுநாட் சயனத்துக்குத் தனக்கு இடம்பண்ணவேண்டுமென்று கேட்டு நாலிறைசால் பொருந்தி அதற்கு ஈடாகத் தன்னுடைய கன்னபூஷணத்தில் ஒரு சோட்டைக் கழற்றிக் கொடுத்து விடுதியிலே தங்கிப் போசனபானம்பண்ணிச் சுகந்தாதியணிந்து திருவிழாச் சேவைசெய்து போய்ச் சாக்கிரதையோடே இருந்து தன் சுகத்தையும், பெலத்தையும், பணத்தையுஞ் சேலவிட்டு எண்ணத்தை முடித்து வீட்டுக்குத் திரும்பினார். மறுபடி வைத்த அடகை மீண்டெடுக்கத் திராணி போதாமையினால் சிலநாள் தாமதித்துப் பணஞ் சம்பாதித்துக்கொண்டு தன் சங்க தூதனையுஞ் சேர்த்துக்கொண்டு அடகு எடுக்கப் போனார். அங்கிருந்த தூர்த்த வியாபாரிகள் இவரைப்பற்றி மகா பிரபுவென்றும், கொடைக்குக் கன்னனென்றும், செலவுக்கு முன்பின் பார்க்கிறவரல்லவென்றும், இவருக்கு உச்சாக வார்த்தைகளைப் பேசி, அன்றும் அங்கே தங்கும்படிசெய்து மறுநாள் வெறுமையே அனுப்பிவிட்டார்கள். இவர் தான் வைத்த அடகையுங் கொண்டுபோன பணத்தையும் இழந்து வெறுமையாய் வீட்டுக்கு வந்தார். இதன்பின் இவர் தன் வீட்டோடே தங்கி இந்தவித வியாபாரத்தை விட்டு வேளாண்மை வர்த்தனத்தில் நின்றார். ஆனாலும் இவர் தன் குடித்தனத்தையோ விடவில்லை. நான் இவரைக் கண்டு இந்தக் குடி உமக்குக் கேடாய் முடியுமென்றதற்கு அவர், நான் என்ன செய்வேன் விதிவிடாதென்றார். இவர் வாடிக்கையாய்க் குடித்துவந்த விதங்களையும் தன் சமுசாரத்தாரோடே சன்னடைபிடித்துவந்த விதங்களையுங் கடன்வாங்கின விதங்களையும் பலவாய்ப் பிறர்சொல்லக் கேட்டதுண்டு. அதைவிட்டுக் கண்ணாலே கண்டவிதத்திற் சிலவற்றைச் சொல்லுவேன். கேளுங்கள், மழைபெய்த காலத்தில் வேளாளர் யாவரும் தங்கள் தங்கள் வயலுக்குட் போய் வேலைசெய்துகொண்டுநிற்க, இவருந் தன் வயலுக்குள் வேலைக்குப்போய் எட்டுமணிமட்டும் வேலைசெய்து மண்வெட்டி வேலைசெய்தால் அந்த மண்வெட்டியையுங் கொண்டு அடுத்த குறிச்சியிற் போய்த் தாகசாந்திபண்ணித் தள்ளாடடம் வாங்கிச் சுருட்டுமொன்று பற்றவைத்துக்கொண்டு கவிகளும்பாடி ஆனந்தமுள்ளவராய்த் திரும்பிவந்து தன் வயலுக்குள் வேலைசெய்யக்கூடாமல் வீட்டுக்குப்போய் நித்திரைசெய்து, பின்னேரம் மூன்றுமணிபோல எழுந்து வயலுக்குவந்து ஒருமணி நேரம் மட்டுக்கு வேலைசெய்து நாலுமணிமட்டுக்குத் தாகசாந்திக்குப்போய்க் காலமே வந்தவிதமாய்க் கவிபாடிச் சுருட்டுங் குடித்து வருவார். வயல் உழப்போனால் தாகசாந்திக்குக் குறித்தநேரம் வருமட்டும் உழுது ஏரை வயலிலே நிறுத்தித் தாகசாந்திக்குப் போய் முன்போல மறுபடியுங் களிப்போடே சுருட்டுங் கவியும் வாயுமாய் வந்து ஏரையும் அவிழ்த்துக் கொண்டு வீட்டுக்குப்போய் ஏர்மாடுகளைக் கட்டிப் பட்டினியாக விட்டுத் தான் நித்திரைசெய்து மூன்றுமணிமட்டுக்கு எழும்பிப் போசனம்பண்ணி எருதுகளையும் அவிழ்த்துக் கலப்பை நுகமும் எடுத்துக் கொண்டுபோய்ப் பூட்டிச் சற்றுநேரம் உழுது ஏரை வயலிலே நிறுத்தித் தாகசாந்திக்குப்போய் வழமைபோலக் களியோடுங் கவியோடும் வந்து ஏரையும் அவிழ்த்து வீட்டுக்குப் போவார். இவ்விதமாய் ஒவ்வொருநாளும் ஆம், ஒவ்வொரு நேரமுஞ் செய்வார். இப்படி நாள் வட்டத்திலே செய்துவந்தமையால், ஏர்மாடுகள் நடைதழர்ந்து சில காலத்திற் சென்றுவிட்டன. வயல் உழவில்லாமையினாலும், எருவில்லாமையினாலும், விளைவு குன்றிப்போனது. இறைப்பில்லாமையினால் மரப் பிரயோசனம் அற்றுப்போனது. வீட்டுத் தட்டுமுட்டுகளும் வேளாண்மைக் கருவிகளும் கள்ளுக்கு அடகாகவும் அறுதியாகவும் ஒழிந்துபோயின. இப்படியே சகலமும் அபரபக்கச் சந்திரனைப்போலத் தோன்றுமற் சுருங்கிக் கலிவந்து புகுந்து அடிபிடி உண்டாக்கிப் போசனத்திற்கும் வழியற்றுக் கடன்வாங்கிக் காணிவிற்றுக் குறித்த ஐயாயிரம் இறைசாலுக்கு மேற்பட்ட ஆஸ்தியும் அழிந்த பின்பு, போசனமில்லாமையாய் நோய்கொண்டு அவருடைய ஒரு புத்திரன் இறந்துவிட்டான். போசனத்தின் நிமித்தம் பெண்சாதிக்கும் இவருக்கும் நித்தியசண்டை யுண்டாயிருந்தது. ஒருநாள் இவர் குடித்து வெறியோடே வந்து பெண்சாதியுடைய கையிலே ஒரு பொல்லாலே அடிக்க அவளுடைய கை முரிந்து சிலநாளிற் பின்பு அதினாலே வலியுண்டாகி அவளும் மரணித்தாள். அவரோ தன் ஊரைவிட்டுத் திரிகோணமலைக்குப்போய் யாசகனுய்த் திரிந்து மரித்தார். மற்றப் புத்திரனே தன் ஊரோடே வீட்டுக்குவீடு வாங்கித்தின்று சற்றே வளர்ந்து கூலியைக்கொண்டு சீவனம்பண்ணி வருகிறான். இந்தச் சமாசாரம் நடந்த ஒருண்மை.

இது சம்பவிக்கக் காரணமாயிருந்தது குடியோ? கூத்தோ? திருவிழாவோ? விபசாரமோ? இதை ஆராய்ந்தறிய வல்லவர்கள் நிதானித்துத் தீர்மானித்துச் சொல்லுங்கள்.

ஓர் தந்தைக்கு மைந்தன் மற்றோர் மைந்தற்குத் தந்தையானாற்போல, ஓர் காரணத்திலிருந்து தோற்றியகாரியம் மற்றோர் காரியத்திற்குக் காரணமாய் முடிந்ததே. ஐயோ! பாருங்கள், பாருங்கள், யாவரும் பாருங்கள்.

இப்படிக்கு,
கன்காணி.

காகிதப்பிரத்தியுத்தரம்.

தேற்றுங்கொட்டை செந்தமிழ்க்குஞ்சு, சி. தினகரப்பிள்ளை என்பவர்களுடைய கடிதங்கள் வந்து சேர்ந்தன. அவைகளைப் பார்வையிட்டு உத்தமமானால், பிரசித்தம்பண்ணுவோம்.

[Prophecies concerning Christ and their Fulfilment.]

கத்தராகிய இயேசுக்கிறிஸ்துவைப் பற்றிய

தீர்க்கதரிசனக் குறிப்பு.	தீர்க்கதரிசனம் நிறைவேறின குறிப்பு.
[உ. மு. ௩௯௮௪. ௵.] ௰௯. நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிறஉடம்படிக்கையின் தூதனுமானவர்விரைந்து தமது ஆலயத்திற்கு வருவார். (மல்கி. ௩: ௧. ஆகா. ௨: ௭—௯.)	[தீ.நி.செ. ௩௯௭. ௵.] இயேசுவென்னும் பிள்ளையைநியாயப்பிரமாண முறைப்படிசெய்யத் தேவாலயத்திலே கொண்டுவந்தபோது ஷிமியோன் அவரைத் தன்கையிலேந்திக்கொண்டு தேவனைத் துதித்தான். (லூக். ௨: ௨௪—௩௨. யோவா. ௨: ௰௩-௰௬. மத். ௨௧: ௰௨.) [தீ. நி. கி. மு. ௪.]
[உ. மு. ௩௨௯௨. ௵.] ௨௦. அவர் தரித்திரர். உருபமும் சௌந்திரியமும் அவருக்கில்லை. நாம் அவரைப் பார்க்கும்பொழுது அவர்மேற் பிரியம் வைப்பதற்குவடிவில்லை. (ஏசாயா. ௫௩: ௨.)	[தீ.நி.செ. ௭௪௦. ௵.] நரிகளுக்குக் குழிகளும்ஆகாசத்துப்பறவைகளுக்குக் கூடுகளுமுண்டு, மனுப்புத்திரனுக்கோ தலைசாய்க்கவும் இடமில்லை. (லூக். ௯: ௫௮. மாற்கு ௯: ௯.) [கி. பி. ௨௮.]
[உ. மு. ௩௨௯௨. ௵.] ௨௧. அவர் சாந்தமுள்ளவர். கலகமாகிலும் உரத்த சத்தமாகிலுஞ் செய்யார். அவர் வீதியில் தமது கூக்குரல் கேட்கப்பண்ணுர். (ஏசாயா. ௪௨: ௨—௪.)	[தீ.நி.செ. ௭௩௯. ௵] அனேக சனங்கள் அவருக்குப் பின்செல்ல அவர் அவர்களெல்லாரையுஞ் சொஸ்தப்படுத்தித் தம்மை ஒருவருக்கும் பிரசித்தம்பண்ணுதபடி கட்டளையிட்டார். (மத். ௰௨: ௰௫. ௰௬.) [கி. பி. ௨௭.]
[உ. மு. ௩௨௯௨. ௵.] ௨௨. அவர் உருக்கமான அன்புள்ளவர். அவர் மேய்ப்பனைப்போலத் தமது ஆட்டுக் கூட்டத்தை மேய்ப்பார். ஆட்டுக் குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்துத் தமது மடியில் வைத்துத் தாங்குவார். பாலாடுகளை மிருதுவாக நடத்துவார். (ஏசா. ௪௰: ௰௧.)	[தீ. நி. சே. ௭௪௧. ௵] நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கமாட்டாத மகா ஆசாரியன் நமக்கில்லை. பாவத்தைத் தவிர எவ்விதத்திலே நம்மைப் போலச் சோதிக்கப் பட்டாரே. (எபி. ௪: ௰௫. மத். ௰௨: ௰௯—௨௰.) [கி.பி. ௨௦.]
[உ. மு. ௩௨௯௨. ௵.] ௨௩. அவர் குற்றமற்றவர். அவர் கொடுமைசெய்யவில்லை. அவர் வாயிலே கபடமில்லை. (ஏசா. ௫௩: ௯.)	[தீ. நி. சே. ௭௪௧. ௵] அவர் பாவஞ்செய்யவில்லை. அவர் வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லையென்று பேதுருவுஞ் சொல்லுகிறார். கள்ளனும் இவரோ தகாததொன்றையுஞ் செய்யவில்லையேயென்றான். (௧. பேது. ௨: ௨௨. லூக். ௨௩: ௪௧.) [கி. பி. ௰௯.]
[உ. மு. ௨௯௮௫. ௵.] ௨௪. அவர் பத்திவைராக்கியர், உமது ஆலயத்தினிமித்தம் நான் கொண்ட வைராக்கியம் என்னைப் பட்சித்தது. (சங். ௬௯: ௯.)	[தீ.நி.சே. ௧௦௪௮ ௵.] இயேசுவானவர் தேவாலயத்தைச் சுத்திகரித்தபொழுது சிஷர் இந்த வாக்கியத்தை நினைவுகூர்ந்தார்கள். (யோவா. ௨: ௰௩—௰௭.) [கி. பி. ௨௭.]
[உ. மு. ௩௦௭௪. ௵.] ௨௫. அவர் உவமைகளால் பிரசங்கிப்பார். நான் ஒரு உவமையோடே என் வாயைத்திறந்து பூர்வீகபுதைபொருள்களை வெளிப்படுத்துவேன். (சங். ௭௮: ௨.	[தீ.நி.சே. ௯௫௭. ௵] இயேசு உவமையாகச் சனங்களுடனே பேசினார். உவமைகளினாலேயன்றி வேறுவிதமாய் அவர் அவர்களுடன் பேசவில்லை. (மத். ௰௩: ௩௪—௩௫.)
[உ. மு. ௩௨௯௨. ௵.] ௨௬. அவர் அற்புதங்களைச் செய்வார். அவரே வந்து உங்களை இரட்சிப்பார். அப்பொழுது குருடருடைய கண்கள் திறக்க	[தீ. நி. சே. ௭௪௦. ௵.] அவர்களுக்குத்தரமாக இயேசு நீங்கள் கண்டுங்கேட்டுமிருக்கிற வைகளை யோவானுக்குப் போய்த் தெரிவியுங்கள். குருடர்

ப்படும். செவிடருடைய செவிகள் திறப்புண்ணும். முடவன் மான்போலத் துள்ளுவான். ஊமையுடைய நாவுமாடும். (ஏ. சா. ௩௫: ௫—௬.)

(இன்னும்வரும்.)

பார்வைஅடைகிருர்கள், சப்பாணிகள் நடக்கிருர்கள்குஷடரோகிகள்சொஸ்தமடைகிருர்கள், செவிடர் கேட்கிருர்கள், மரித்தோர் எழுப்பப்படுகிருர்கள். (மத். ௰௧: ௫—௫. யோவா. ௰௧: ௪௭.) [கி. பி. ௪௭].

உதயதாரகை.

௲அ௱௫௬ ௵. மாசி ௴. ௰௨.

[Supreme Court.]

யாழ்ப்பாணம்.

சுப்பிறீங்கோடு.—இம்முறை கூடிய சுப்பிறீங்கோட்டில் விளங்கும்படி பாரப்படுத்திவைத்த வழக்குகள் ஏழ.

க. தன்னுலை குடி மாப்பாணமுதலியார் கதிர்காமனும் வாரியாள் வயிரவனும் கள்ளப் பற்றுச்சீட்டுக்கொடுத்ததின் பேரால் இருவருங் குற்றவாளியானதினுல் முதலாம் மறியற்காரன் மூன்றுவருடமும், இரண்டாம் மறியற்காரன் இரண்டு வருடமும் விலங்குடன் கடூர ஊழியஞ் செய்யும்படி தீர்மானமாயிற்று.

உ. களவெடுத்ததும் கள்ளஉடைமையை வைத்திருந்ததும். இதிலேற்பட்ட மறியற்காரன் சீதாரிகுடியோன் அலவைநஸ் என்ற ஒரு பறங்கி. இவன் ஒரு வீட்டிலே வேலைகாரனுயிருந்ததினுல் அதற்கு முதலாளிகள் சிறிது ஆபரணங்களை எடுத்து ஒரு அறையிலே வைத்துப்பூட்டித் திறப்பை இவனிடத்திலே கொடுத்துவிட்டுக் கொஞ்ச நாளைக்கு அந்தவீட்டிலிராமல்மறுஇடத்துக்குப்போயிருந்தவேளையில் இவன் இந்த உடைமைகளைக் களவாக எடுத்துக் கொண்டுபோய்விட்டான். விளக்கவேளையில் நீ செய்த காரியத்துக்குக் குற்றவாளியோ சுத்தவாளியோவென்று கேட்டபொழுது தான் இரண்டாங் குற்றச்சாட்டுக்குக் குற்றவாளியென்றதினுலும், இவன் களவெடுக்க முன்னே நல்லநடத்தை உள்ளவனென்றும் வெகுநாட்பட்ட உண்மையான பணிவிடைகாரனென்றும் அவனுடைய எசமான்கள் சொன்னதினுலும், விலங்கில்லாமல் ஆறுமாதங் கடூர ஊழியஞ் செய்யும்படி தீர்மானமாயிற்று.

௩. கள்ளஉறுதி. சாவுகச்சேரிக்குச்சேர்ந்த மிரிசுவில்குடி கதிர்காமர் சிதம்பரநாதன்—உறுதியெழுதின நொத்தாரிசும் அதற்குச் சாட்சிக்காரராக நின்ற இரண்டுபேரும் விளக்கத்திற் சொன்னதென்னவெனில், சொல்லப்பட்ட சிதம்பரநாதனென்பவன், கடன்காரியென்றதாகக் கள்ள மாரிசமாய் வேறொரு மனிதியைக் கொண்டுவந்து உறுதிக்குக் கையெழுத்து வைப்பித்துக் கொண்டுபோனனென்றும், அவள் ஆரென்று தங்களுக்குத் தெரிய வராதென்றுஞ் சொன்னர்கள். அல்லாமலும், இதில் ஏற்பட்ட முறைப்பாட்டுக்காரிபோய்ச் சமாதான நீதவானுக்கு முறைப்பாடுபண்ணியும் அவருடைய விளக்கத்துக்கு முன் அவள் மரணித்துப் போனதினுலும், நொத்தாரிசுஞ் சாட்சிக்காரரும் ஒத்துக்கொண்டு கள்ளஞ்செய்யக்கூடியதாய் இருக்குமென்று யூரிமாருடைய எண்ணத்திற் பட்டதினுலுஞ் சொல்லப்பட்டசிதம்பரநாதன்விடுதலையாக்கப்பட்டான்.

௪. அடித்துக் காயப்படுத்தினது. இதில் முதலாம்மறியற்காரன் வயிரவன் நாகன்—கடனுகக் கள்ளுக்கொடுத்த காசைப்பற்றி முறைப்பாடுகாரனுக்கும் மறியற்காரர் இரண்டுபேருக்கும் அடிபிடியுண்டானவேளையில், முதலாம் மறியற்காரன் தன் கையிலிருந்த மடக்குப்பிடிக் கத்தியினுலே முறைப்பாடுகாரனுடைய வயிற்றிலே ஓங்கித் தாழக்குத்திக் காயப்படுத்தினன். அந்தக் காயத்தினுலே அவன் சாகிறதற்கு ஏதுவாயிருந்தபோது, யாழ்ப்பாணத்து ஆபத்துக்குதவிச் சங்கத்து ஆசுபத்திரியில் அவனைக்கொண்டுபோய்விட்டு நல்லபரிகாரஞ் செய்ததினுல் அவன் சாகாமற் சுகப்பட ஏதுவாயிற்று. இந்த முதலாம் மறியற்காரன் இதற்கு முன்னும் அடிபிடிகாரியங்களில் ஐந்துமுறை போலீஸ் கோடுகளிற் குற்றப்பட்டவனென்று தெரியவந்தது. இந்த விளக்கத்திலும் இவன் குற்றவாளியானதினுல் மூன்று வருடம் விலங்குடன் கடூர ஊழியஞ்செய்துகொண்டு மறியலிருக்கவும் இருபது அடிபடவுந் தீர்மானமாயிற்று. அடிபிடிப்பட்ட இடத்துக்கு இரண்டாம் மறியற்காரனுங் கூடிக்கொண்டுபோயும் அதுகாரியத்தில் அவன் சற்றுங் கையிட்டுக்கொள்ளாததினுல் அவன் விடுதலையாக்கப்பட்டான்.

௫. கள்ளக் கையெழுத்து வைத்துப் பணமெடுத்தது. இதில் ஏற்பட்ட மறியற்காரர் சந்தியாகுப்பிள்ளை சவரிமுத்து, அம்பலவி ஆள்வான், கச்சேரியிலே பணமெடுக்கும்படி கோவரணமேந்தின் பண்டக சாலைக்கு முதலாளியாகிய இஸ்தோர்க்கீப்பர் இரண்டுபவுனுக்கும் நாலு சிலிங்குக்கும் ஒரு ஊன்டியல் எழுதியனுப்பிவைத்தார். அது சிருப்பருடைய கையிலே போகமுன்னே அந்த நாலு சிலீங்கைப் பதினுலுசிலீங்காக மாற்றி எழுதி இரண்டு பவுனும் பதினுலுசிலீங்கும் எடுக்கப்பட்டது. இது காரியத்தை வெகுநேரமாக விளங்கினவேளையில், முதலாம்மறியற்காரன் சுத்தவாளியாக இரண்டாம் மறியற்காரன் குற்றவாளியாகி ஒரு வருடம் விலங்குடன் கடூர ஊழியஞ்செய்துகொண்டு மறியலிலிருக்கத் தீர்மானமாயிற்று.

௬. சிறுவிளானிற் கள்ளமாட்டுக்குத் துண்டுகொடுத்தகாரியம். சுப்பிறீங்கோட்டில் விளக்கத்துக்கு வருமுன் இதைப்பற்றி இன்னுஞ் சிறிது காரியங்கள் அறியவேண்டிய அவசரமிருப்பதினுல், மறுமுறை கூடுஞ் சுப்பிறீங்கோட்டில் விளங்கும்படி தவணை போடப்பட்டது.

௭. திருக்கோணுதமலையிற் கொலைகாரியம். மறியற்காரன் வயிரவி குருநாதி, அடிபட்டதினுற் காலஞ்சென்றுபோன மனிதியும் மறியற்காரனுங் கிட்டின உறவின்முறையார். சமுசார காரியத்தைப்பற்றி இரண்டுபேருக்கும் பேச்சுண்டான வேளையில் மறியற்காரன் ஒரு கைக்கத்தியை எடுத்து அவளுடைய சரீரத்திற் பலவிடங்களிலுங் கடினமாய்க் காயப்படுத்தினன். அவளை ஆசுபத்திரியிற் கொண்டுபோய்ப்போட்டுத் திரும்பவும் வீட்டுக்குக் கொண்டுபோய் அங்கே வைத்துப் பரிகாரப் பழக்கத்தில் மெத்தக் கைவராத ஒருவனிடம் பரிகாரஞ் செய்வித்துக்கொண்டு சிறிதுமாதமாய்க் கிடந்து காயம் மாருதபடி சிதள்பாய அழுந்தி இறந்துபோனுள். மறியற்காரன் தான் கைபிழைபாடான குற்றவாளியென்று சொன்னதினுல் பத்துவருடம் பிறவூருக்கு ஏற்றும்படி தீர்மானமாயிற்று.

யாழ்ப்பாணஞ் சீதாரியில் மெஸ்தர் மெய்யருடையகாரியம் போனமாதம் இருபதாந் திகதி கொழும்பிற் சுப்பிறீங்கோட்டில் விசாரவண பண்ணின வேளையில், வழக்காளிபக்கத்தைச்சேர்ந்த பிரதான சாட்சிக்காரருடைய ஒப்பனைகளில், அனேக வித்தியாசங்கள் கண்டதினுலும் அசாத்தியத்துக்கிடமான அனேக காரியங்கள் ஒப்பிணையிலிருந்ததினுலுஞ் சொல்லப்பட்ட மெய்யரேன்பவர் சுத்தவாளியென்று தீர்க்கப்பட்டார். இந்த வழக்குண்டான காரணமென்னவெனில், இற்றைக்குச் சிறிதுமாதத்திற்குமுன் சிறிது துரைமார் யாழ்ப்பாணத்திலே வந்துசேர்ந்து அன்றிராத்திரி ஒரு வீட்டிலே விடுதிவிட்டிருந்தார்கள். மற்றநாட் காலமே அவர்களில் ஒரு துரையெழும்பிப் பார்த்தபொழுது, தான்வைத்த பையையும் அதிலிருந்த இருபத்தொன்பது மோருவையும் வேறுசில உடமைகளையுங் காணவில்லை. கொஞ்சநாட் சென்றதின் பிற்பாடு, மெய்யரேன்பவர், தான் மெஸ்தர் உவையிற்றவுசு துரைக்குக் கொடுக்கவேண்டிய பணத்தினபேரால் பதினேழுமோருவைக் கொடுத்தபொழுது, அது முன் களவுபோயிருந்த மோருவாயிருக்கவேண்டுமென்று அசுகைகொண்டு அவருடைய வீட்டையுஞ் சோதணைபண்ணின வேளையிலும், பல்லு மினுக்குகிற ஒரு விறசும், பல்லுமினுக்குகிற தூளிருந்த ஒருகடுதாசியும் இருந்தெடுக்கப்பட்டது. அவ்விரண்டுந் தங்களுடைய பொருள்தானென்று துரைமார் ஒப்பனைபண்ணினுர்கள்.

பிரமதேசம்.—பிரமருக்கும் இங்கிலீசுகாரருக்கும் இற்றைக்கு ஏறக்குறைய ஒருவருடக்காலமாய் நடந்துவந்த யுத்தம் இன்னுந் தணியவில்லை. இப்போதான் யுத்தம் ஆரம்பித்ததென்றும் ஒருவர் எழுதுகிருர். ஏனென்ருல், இங்கிலீசுகாரருடைய துவக்குகளையும் பீரங்கிகளையும் பிரமர் கண்டவுடனே பயந்து ஏங்கிப் புறங்காட்டிவந்தார்கள். ஆனலும் இப்பொழுது இங்கிலீசுகாரர் பக்கத்தைச் சேர்ந்த சேனுபதியுடைய தாமதத்தினுலும், பெலவீனத்தினுலும் பிரமர் மிஞ்சித் தயிரியங்கொண்டு இங்கிலீசுகாரருக்கு அதிகந் தொந்தரவுகளை வருத்தினுர்கள். எப்படியெனில், இங்கிலீசுகாரர் இரண்டாம் முறை யுத்தம்பண்ணிப் பிடித்த பீக்கு என்ற பட்டிணத்தைக் காவல் காக்கும்படி தங்கள் படைசனங்களிற் சிலரை வைத்து இறங்கூனுக்குப் போயிருக்கையில் காவலாய் நின்ற படைகளைப் பிரமர் எட்டுநாளாக முற்றுக்கைபோட்டு அஞ்சாதநெஞ்சத்துடனே யுத்தஞ்செய்தார்கள். அப்பொழுது பட்டிணத்தைக் காவல்பண்ணின படைசனங்கள் ஆண்மையாய் எதிர்த்து நிற்கையில் சேனுபதியும்இறங்கூனிலிருந்து படைசனத்துடனே வந்து அவர்களுக்கு உதவிசெய்து சத்துருக்களைத் கொஞ்சத் தூரத்திற்குத் தூத்தி இரண்டுமூன்று நாளைக்குள்ளே மறுபடியும் இறங்கூனுக்கு வந்துவிட்டார். இது மார்கழிமாதம் பதினுலாந்திகதி நடந்தது. அதன்பிற்பாடு முப்பதாந்திகதியிலன்று இந்துதேசத்திற் கோவரணதேசாதிபதியவர்கள் பீக்கு என்ற பட்டிணம் இங்கிலாந்திராசாத்தியுடைய ஆளுகைக்குச் சேர்ந்த இடங்களுடனே சேர்க்கப்பட்டதான பிரசித்தத்தைப் பண்ணினுர். இந்தப் பீக்கு என்ற மாகாணத்திலேதானேமுற்காலத்தில் இராசாக்களிருந்துஇராச்சியம்பண்ணிவந்தார்கள். அது பெரிய விஸ்தாரமான தேசம். அதின் எல்லைக்குள்ளே இறங்கூன், பீக்கு, புரோமி என்று சொல்லப்பட்ட மூன்று பிரதான பட்டிணங்களுண்டு. அது மிகவுஞ் செழிப்பானதாயுஞ் சிறப்பான துறைமுகங்களுள்ளதாயும் ஏறக்குறைய இருபதிலட்சஞ் சனமுள்ளதாயுமிருக்கின்றது. கடைசியாய்ப் பிரமதேசம் முழுவதும் இங்கிலிசுகாரருடைய அரசாட்சிக்குட்படுமென்று நினைக்க இடமுண்டு.

கர்த்தாவே, உம்முடைய கண்களுக்கு மறைவானதொன்றுமில்லை. ஒரு பிதாவும் பிள்ளையும் விளைச்சல் காலத்தில் களவாகக் கதிர்களைக் கொய்வதற்குப் புறப்பட்டு வயலண்டை வந்தபொழுது பிதாவானவன் ஒரு வேலிக்குமேலேறி யாவரேனுந் தன்னைக் காணக்கூடுமோவென்று நாலுபக்கமும் கூர்மையாய்ப் பார்த்துக்கொண்டு பின்பு கதிர்களைக்கொய்து தன் பறியிற் சேர்க்கத் தொடங்கினுன். அப்பொழுது அவன் மகன் என் பிதாவே, நீர் ஒரு திக்கை மாத்திரம் நோக்கிப்பாராமல் விட்டுவிட்டீரென்க, பிதா ஏங்கி, ஆ! என் மகனே, அதெங்கேயென்ருன். பிள்ளை, நீர் அண்ணுர்ந்து மேலே பார்க்கவில்லையே என்க, பிதாத் தன் பறியிலிருந்த கதிரை எடுத்துக் கொட்டிப்போட்டுக் குறுவின மனதோடே வீட்டுக்குத் திரும்பினுன். ஆயிரம்பதினுயிரம் மனுஷர்களுக்குப் பயப்படுகிற பயத்திலும் கடவுளுக்குப் பயப்படுவதே பயம். அவருடைய கண்களுக்கு மறைவான தொன்றுமில்லை. இரவின் அந்தகாரங்களும் அவருக்குமுன் வெளிச்சமாயிருக்கின்றது. அவர் உக்கிர கோபத்தின் நாளிலே இயேசுவின் திரு உதிரமும் அவர் நீதியுமே பாவங்கள் யாவையும் மறைக்கும். இவரே பாவிகளின் அடைக்கலம்.

பிருன்சுதேசம்.—ஏரோப்பை தேசத்திலே தத்துவத்திலுங் கல்வியறிவிலும் அதிகம் மேம்பட்டவர்களாயிருக்கின்ற சாதிகளுக்குள்ளொன்ருகிய பிருன்சு சாதியாரை ஆளும்படிக்குப் பாப்புவானவர் லூவிஸ் நெப்போலியனென்பவரை இராசாதிராசனுகப் பட்டாபிஷேகஞ் சூட்டி வைக்கும்படிக்குக் கடைசியாய்ச் சித்தமானுர். இந்த நெப்போலியனென்பவர் பிறகிட்ட ௲அ௱௪அ ம் ஆண்டு சித்திரைமாதம் பத்தாந் திகதியிலன்று லொண்தோம் பட்டணத்திலே, சேவுகவேலையைப் பாரபரிக்கும்படி சத்திய மூலமாயேற்பட்டுத் தன் பணிவிடையை நடத்தி வந்தார். இற்றைக்கு ஐந்து வருடத்திற்குமுன் அவருடைய நிலைபரம் எப்படியிருந்ததென்ருல், தனக்கு உடுப்புத்தைத்த தையற்காரனுக்குக் கூலி கொடுக்கவும் அல்லது தனக்கு வந்த செலவுகளில் அரைவாசியைத் தானுஞ் சரிக்கட்டிக் கொள்ளவுங்கூடாத அவ்வளவு பணக்குறைச்சலுள்ளவராயிருந்தார்.

ஆபிரிக்கா.—மட்டைக்காஸ்கரென்னுந் தீவில் இராச்சியம்பண்ணுகிற இராசாத்தியுடையமுதன் மந்திரி காலஞ்சென்றுபோனதினுலே கிறிஸ்தவர்களுடைய துன்பப்படுத்தல் அத்தோடே நின்றுபோய்விடும்போலேயிருக்குது. பிரதானமாய் இங்கிலாந்தார்முதலிய கிறிஸ்தமான சாதிகள் அந்தத் தீவிலே போய் வியாபாரம் பண்ணுவதற்கேற்ற ஒழுங்குகளைச் சீக்கிரம் பண்ணுவார்களென்று காத்திருக்கிருேம்.

நெல்விளைச்சல்.—இந்தவருடம் வழமையில்லாதபிரகாரம் தைமாதத்திலும் அதிக மழைபெய்ததினுல் வயற்காணிகளிலேயுள்ள நெல்லுக்கள் சேதம் போய்விடுமெனப் பயந்திருந்தாலும் இப்பொழுது மழை தணிந்ததினுல் அதிகம் நட்டமுண்டுபடவேதுவாயிருக்கவில்லை. எவ்வருடத்திலும் இவ்வருடம் வேளாண்மை எந்தப்பகுதிகளிலும் அதிகமாயிருக்கின்றது.

மன்னுர்.—கண்டி முதலிய இடங்களிலுள்ள கோப்பித்தோட்டங்களில் கூலிவேலைசெய்து பிழைக்கும் முகாந்திரமாய் மதுரை முதலிய சீர்மைகளிலிருந்து வந்து கூலிக்காரர் இறங்குகின்ற தலைமன்னுரை ஏற்றுமதி இறக்குமதிக்கேற்ற துறைமுகமாக நிசமிக்கும்படி இலங்கை அரசாட்சியார் சித்தமானுர்.

MORNING STAR.

Jaffna, Thursday, February 10, 1853.

OUR PAPER FOR 1853.

What is the appropriate province of the Morning Star in regard to its *subject matter?*

Negatively, it is not for the discussion of party politics or colonial policy. It is not the advocacy of sectarian views, or the agitation of subjects of questionable utility—whether in church or state. Much less can our paper be an allowed medium for personal contests, either in the way of assault or defence. For these and such like subjects, the three newspapers, issued each twice a week in the island, are amply sufficient. "The Morning Star then must be an exceedingly tame paper," says one.

Not necessarily so. Its range for appropriate topics is sufficiently extensive. It must, however, be admitted that in regard to the *amount* of its subject matter, its province is extremely limited. The paper is of a very diminutive size—published in two languages, (though not strictly speaking a diglot,) and appearing but twice a month. The size of the paper, however, is quite as large as the public will allow it to be, if we would rigidly adhere to our purpose of furnishing it at so low a rate as to meet the exigencies of a community, who are not readily trained to the habit of purchasing and reading newspapers. We have had it in contemplation to place the publication on a more satisfactory basis, either by a higher rate of payment from European subscribers, or by soliciting from them donations for making up the deficiency of expenditure for the paper above the receipts. The latter course is to be preferred, and this is the first distinct intimation we have given that donations for this purpose would be acceptable.

"But what is the *use* of continuing such a paper as the Morning Star?" says another.

Its specific uses are: 1. The further enlightenment and moral improvement of the native community, by placing within their reach, the manifold advantages of a newspaper on a small scale. 2. The Star is an appropriate connecting link and medium of communication, with that large class of the native population, both male and female, who have been educated in mission institutions, and who are now scattered abroad, not only in this province, but throughout the island, and on the adjacent continent. 3. The Star is a convenient medium, through which to report ourselves from our retirement in the country, to that portion of the European population, and more especially to the government, from whom we receive benefactions in aid of our educational and mission establishments. 4. Though we are neither Episcopalians, Wesleyans, nor Baptists; neither English, Dutch, nor Portuguese, we participate in the aspirations of the youthful Elihu to show also our opinions on mission matters, and to furnish data for ascertaining the correctness and value of them as tested by their fruits. In this particular also, the Star is our mouth piece, and o substitute for personal intercourse with European society.

"But what of importance can possibly be crowded into the diminutive half sheet whether in Tamil or English?" asks a third.

To this inquiry, we will allow the pages of the publication of the past twelve years to testify. But more specifically, the subject matter of the Star should consist, 1. Of *news*, both domestic and foreign,—availing ourselves of monthly communications direct from the far *west*, which in these days is in close contact with the far *east*.

2. Correspondence from native and European subscribers. We must, however, apprise our native correspondents that if they would exercise and improve their gift for writing as we would have them do, they must have much patience with us in our dealings with their communications, whether in the way of abridging, controverting or suppressing them. As we are wishing to encourage this branch of mental and moral culture, on the part of the educated natives, we would suggest to them the expediency of a periodical to be exclusively under their own supervision. This might give full scope to their powers for mutual improvement, and for imparting information to their countrymen. Such a paper, we should regard as a valuable auxiliary.*

3. The progress and prospects of Christian education in the province, both male and female, whether in English or in the vernacular tongue.

4. Miscellaneous topics.

5. The progress and prospects of the teetotal reform—whether at home or abroad—more especially in its new developments as affected by the "Maine Law;" a law by which intoxicating drinks are placed in the same category with the *goring ox*, which was to "be stoned to death," (seeing it had been testified of it that it had killed a man or a woman;) and in the same category with *arsenic* and other poisons by which men and women are wont to destroy themselves. Another subject therefore of the Star will be to aid our readers in forming a correct *judgment* of this novel liquor law, according to the divinely prescribed rule, of *judging of a tree by its fruits*.

6. And finally, *knowing* that "*righteousness* exalteth a nation, but *sin* is a reproach to any people," we would give due prominence in our paper to the *religious* element; not merely in the way of giving *religious intelligence*, but of occasionally summoning, on the broad ground of the revealed truth of God, the never dying spirits of our readers—*beseeching* them, that, ever and anon, in despite of "the cares of this life and the deceitfulness of riches," they will *force* themselves in full view of the retributions of eternity to *agitate* to some good purpose, the inquiry, "What shall it profit a man, though he gain the whole world and lose his own soul?"—and, in close connection with this to *ponder* what may be the depth of meaning in the repeated asseveration of the Heavenly Teacher, "Verily, verily, I say unto you, Except a man be born from above, he cannot see the kingdom of God."

* Since writing the foregoing paragraph we have had the pleasure to learn that the "Young Men's Literary Association, Jaffna" have already *moved* that efforts be made "to publish a literary periodical in Tamil." They have our best wishes for success in such an undertaking.

Believing that our readers and ourselves have much in common on the above mentioned topics, which we would have form the subject matter of the Morning Star, we respectfully solicit from them not only the continuance of their support, but that they will *aid* in increasing the number of our subscribers. And moreover, if any sympathize with us in wishing a continuance of the paper, though at the expense of a pecuniary sacrifice, we invite them to share with us in bearing such a burden.

Some arrangements have been made for rendering the Tamil department of the Star more acceptable to native readers, but this may form the topic of a subsequent article.

EMIGRATION.—The following we extract from a long article originally appearing in the *London Times* of Nov. 5th, and which we find copied in the *Friend of India*. It presents some facts we were not prepared to see, and furnishes abundant matter for thought to the reflecting mind:

At this very moment, for the first time, perhaps, within man's memory the population of Great Britain is rapidly decreasing. There were at least six thousand fewer people in the British isles on the 29th of September than there had been on the 24th of June. In these three months the births were 151,193, and the deaths 100,497, leaving a balance in favor of the population of 50,696; but in the same period there sailed from these shores no fewer than 109,236 persons so that the gain above specified becomes at once a loss of 58,540. A total of some 200,000 or 225,000 a year represented the greatest ordinary amount of gain in this particular, but the loss on the other side is now upwards of 100,000 in a single quarter, and that quarter, we may be pretty sure will be left considerably behind by the quarter next to come. There is no doubt but that more people left the country in October than left it in September, and as little that more are departing in this present month than departed in October.

A remarkable feature of the event is the diversion of the emigrating stream from the westward to the southward. The population of the American Union is likely to suffer in proportion as what may be some day a New Union is likely to gain. As yet the attraction, principally, no doubt, through family ties of the United States still preponderate, and they received 62,579 emigrants out of the 109,236. These, however, were mainly from the port of Liverpool, and the exportations from this quarter consist chiefly of Irish. When we turn to London, which sent forth 21,788, it appears that Australia was the destination of no fewer than 14,956 of the number. The rush to Australia is not constituted by the impulses of famine, wretchedness, or despair. It arises from a deliberate preference of one field to another, and we should probably not be wrong in concluding that at least one-half of the 15,000 persons who last quarter left London for the gold-fields had already a position more or less settled of their own. Many large establishments, are now, in fact, like regiments after a battle, with young hands unexpectedly promoted to the duties of seniors, and vacancies are abundant still. No man can pretend to conjecture where this will end. At every turn and in every department of life we shall encounter the results of a revolution which is almost converting an old country into a young one, which tends to depress capital and to elevate labor, which will put prizes at a discount and candidates at a premium, which will abolish the burden of pauperism, extinguish the springs of socialism, and open fair avenues of advancement to all the middle classes of society. Even if the steam should continue running but for two years longer it will probably deprive Great Britain of at least a million grown up men, and will create a chasm in the population which ten years of subsequent progress would not fill.

